**சுருக்கம்**

பள்ளிக்கல்வித்துறை – இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை கூடுதல் தேவையுள்ள பள்ளிகளுக்கு பணிநிரவல் செய்திடல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித் (வ.செ.2) துறை

அரசாணை (1டி) எண்.270

நாள் 10 .7. 2012

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (1டி) எண்.142, பள்ளிக் கல்வி, நாள்.26.4.2012.
2. தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித எண்.013275/இ1/ 2012 நாள் 6.7.2012.

-----

ஆணை:-

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் உபரி ஆசிரியர் பணியிடங்களை கண்டறிந்து பணிநிரவல் மூலம் நிரப்புவது தொடர்பாக ஓர் குழு அமைக்கப்பட்டது. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தொடக்கக் கல்வி இயக்குநர் தற்போது உபரியாக உள்ள ஆசிரியருடன், இடைநிலை ஆசிரியர்கள் 3144 பேரும் பட்டதாரி ஆசிரியர்கள் 51 பேரும் உபரியாக உள்ளார்கள் எனத் தெரிவித்து, இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன்படி தொடக்கக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஊராட்சி / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1.9.2011–ல் மாணவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் ஆசிரியர் பணியிடங்களை மறுசீரமைப்பு செய்யப்படுவதற்கு முன்னர் மறுசீரமைப்பினால் பாதிக்கப்படாத நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பட்டதாரி ஆசிரியர் மற்றும் தமிழாசிரியர் மாறுதல் மற்றும் பதவி உயர்வுகள் அந்தந்த ஒன்றிய அளவில் அரசாணை(1டி) எண்.158, பள்ளிக் கல்வி நாள் 18.5.2012–ன்படி வழங்கப்பட்டன என்றும், இவ்வரசாணையின்படி இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பொது மாறுதல்கள் வழங்கப்படவேண்டிய நிலை உள்ளது என்றும், இவர்களுக்கு பொது மாறுதல் வழங்கப்படுவதற்கு முன்னர் அரசாணையில் குறிப்பிட்டபடி உபரி ஆசிரியர் பணியிடங்களை பணிநிரவல் செய்த பின்னரே பொது மாறுதல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதென்றும் தெரிவித்துள்ளார், மேலும் தொடக்கக் கல்வித் துறையை பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஒன்றியமும் தனி அலகு என்பதாலும், பதவி உயர்வுகள் ஒன்றிய முன்னுரிமையின்படி வழங்கப்பட்டு வருவதாலும் ஒன்றியத்திலுள்ள உபரி இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை அதே ஒன்றியத்திற்குள் பணிநிரவல் செய்திட போதிய காலிப்பணியிடம் இல்லாத நிலையில், ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் செய்யப்படவேண்டிய நிலை உள்ளது என்றும், இவ்வாறு பணி நியமனம் செய்வதில் கீழ்க்காணும் நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது அரசின் ஆணை வேண்டியுள்ளார்.

(த.பி.பா.)

(i) ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1.9.2011–ல் உள்ள மாணவர்களின் எண்ணிக்கைகளின்படி காலி / உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை பணியிடத்துடனோ அல்லது பணியிடத்தையோ தேவைக்கேற்றவாறு மாற்றி பணிநிரவல் அந்தந்த ஒன்றியத்திற்குள் (அலகு) செய்யப்படவேண்டும். அவ்வாறு ஒன்றியத்திற்குள் பணிநிரவல் செய்யப்படும்போது பள்ளியில் சேர்ந்த தேதியின்படி இளையவரை பணிநிரவல் ஆசிரியராக நிர்ணயித்தல் வேண்டும்.

(ii) ஒன்றியத்திற்குள் பணிநிரவல் செய்யப்பட்ட பின்னரும் உபரி இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர்கள் இருப்பின் அவர்களை அருகில் உள்ள வேறு ஒன்றியத்தில் தேவைப்படும் பள்ளிகளுக்கு மாற்றி பணிநிரவல் செய்திட வேண்டும். அவ்வாறு பணிநிரவல் காரணமாக உபரி ஆசிரியர்கள் ஒன்றியம் விட்டு ஒன்றியத்திற்கு மாற்றப்படும்போது சம்பந்தப்பட்ட ஒன்றியத்தின் ஒட்டுமொத்த முன்னுரிமைப் பட்டியலில் மிகவும் இளையவர்களாக உள்ளவர்களைத்தான் பணிநிரவல் செய்தல் வேண்டும்.

(iii) மேற்குறிப்பிட்டவாறு ஒன்றியம் விட்டு ஒன்றியம் பணிநிரவல் பெறும் ஆசிரியர்களின் முன்னுரிமையானது முந்தைய ஒன்றியத்திலே (அலகில்) தொடர்ந்து இருக்கும் அடுத்தடுத்த கல்வியாண்டுகளில் முந்தைய ஒன்றியத்தில் ஏற்படும் காலிப்பணியிடங்களுக்கு பணிநிரவலின்போது செய்யப்பட்ட முன்னுரிமையின்படி வேறு ஒன்றியத்திற்கு பணிநிரவல் பெற்றவர் மாறுதலுக்கு உட்படுத்தப்படுவார். மேலும் முந்தைய ஒன்றிய முன்னுரிமையினை துறப்புசெய்யவிரும்பினால் அன்னாரது விருப்பக் கடிதத்தின்படி பணிநிரவல் பெற்ற ஒன்றியத்தில் இளையோராக முன்னுரிமை நிர்ணயம் செய்யவேண்டும்.

(iv) ஒன்றியத்திற்குள் மற்றும் ஒன்றியம்விட்டு ஒன்றியம் இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் பணிநிரவல் அந்தந்த மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலரால் மேற்கொள்ளப்படவேண்டும்.

(v) முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் (Total Blindness), மாற்றுத் திறனாளிகள் சட்டம் 1995ன்படி 40% மற்றும் அதற்கு மேலும் ஊனம் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ் பெற்றவர்கள் (மாற்று திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்தினால் சான்றிதழ் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்), விதவைகள் மற்றும் 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத முதிர் கன்னியர், இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள், கடுமையாக பாதிக்கப்பட்ட புற்றுநோயாளிகள் மற்றும் மனவளர்ச்சி குன்றிய மற்றும் உடல் குறைபாடுடைய குழந்தைகளின் பெற்றோர் ஆகியோருக்கு பணியிட மாறுதலில் முன்னுரிமை வழங்கலாம் மற்றும் முற்றிலும் கண்பார்வையற்றவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் விருப்பப்படின் தான் பணி புரியும் இடத்திலேயே பணி செய்ய முன்னுரிமை அளிக்கலாம்.

(த.பி.பா.)

(vi) உபரி இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் மற்றும் உபரி காலி இடைநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மாவட்டத்திற்குள் மாற்ற இயலாத நிலை இருப்பின், பணியிடத்துடனோ அல்லது பணியிடத்தையோ தேவைப்படும் வேறு மாவட்டங்களுக்கு பணிநிரவல் செய்திட தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம்.

2. மேற்காணும் சூழ்நிலையில் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று தொடக்கக் கல்வித் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உபரியாக உள்ள இடைநிலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியருடனும் / ஆசிரியர் இன்றியும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி பணிநிரவல் செய்திட தொடக்கக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை – 6.
<u>நகல்</u>
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலரின் தனிச் செயலாளர்,
பள்ளிக்கல்வித்துறை சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.